10% உழைப்பு		594,733.25
பகுதிநேர பாடநெறிகள்		8,098,127.27
அச்சகப் பாடசாலை நாரஹேன்பிட்டி		1,655,574.82
RPL		5,257,709.43
சிப்சல பொஜ்ன் நாரஹேன்பிட்டி		16,446.50
பல்வித பவருமானம்		
வர்த்தகப் பரிசோதனை		16,500.00
தலல்லா தங்குமிடம்		107,906.75
T - Shirt வருமானம்		181,450.00
வாகன சேர்விஸ்		108,360.05
ஏனைய உற்பத்திப் பிரிவு		617,859.98
விசேட செயற்றிட்டத்தின் அடிப்படையில் நிதியம்		
உயர் தரம் மாணவர்கள்- நிதியம்		130,725.00
SSDP – நிதியம்		153,114,359.42
GIZ- நிதியம்		609,531.99
ILO - நிதியம்		5,114,231.17
வரவு செலவுத்திட்டத்தின் அடிப்படையல் நிதியம்		23,608,531.18
WUSC P செயற்றிட்டத்திக் அடிப்படையல் நிதியம்		865,256.00
ஆளணி செலவு		
E.P.F. செலவு	132,994,370.57	
E.T.F. செலவு	33,090,585.86	
ஏனைய செலவு (ஆளணி செலவு)	404,872,812.05	
சம்பளங்கள் மற்றும் மேலதிக நேரம்	458,799,988.26	
ஆளணி சேவைப் பணிக்கொடை		
சேவைப் பணிக்கொடையின் அடிப்படையில் மிகைக் கட்டணம்		
பிரயாண		
தங்குமிடச் செலவுகள்	653,293.00	
போக்குவரத்து- உள்நாட்டு	7,370,473.58	
போக்குவரத்து- வெளிநாடு	3,040,313.57	
தொகைமதிப்பீட்டு செலவு	1,571,868.15	
வழங்கல் மற்றும் ஏனைய நுகர்வு		
எரிகொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணை கட்டணங்கள்	13,553,344.51	
ஏனைய வழங்கல்	2,017,800.99	
காகிதாதிகள் மற்றும் அலுவலக தேவைகள்	10,249,669.23	
அச்சகப் பொருட்கள்	5,379,687.00	
பராமரிப்பு		
கட்டடப் பராமரிப்பு	10,426,012.39	
இயந்திர உபகரணங்கள் பராமரிப்பு	9,515,292.54	
வாகன பராமரிப்பு	14,205,900.13	
ஒப்பந்த சேவைகள்		
விளம்பரம்	4,429,622.25	
கனக்காய்வுக் கட்டணங்கள்	500,000.00	
நட்டஈடு		
மின்சாரக் கட்டணம்	47,614,556.80	
கூலி	400,000.00	
காப்புறுதிக்	2,779,876.62	
சுத்தம்பேணல் சேவைகள்	8,755,895.04	
புத்திரக்கை மற்றும் சஞ்சிகை	485,743.00	
தபால் கட்டணங்கள்	1,328,322.97	
வாடகை, வரிப்பணம் மற்றும் வரி	7,316,886.85	
பாதுகாப்புக் கட்டணம்	36,180,587.36	
நலன்புரி மற்றும் ஏனைய	1,042,578.70	
தொலைபேசிக் கட்டணம்	21,883,045.90	
போக்குவரத்து	2,616,785.00	
தண்ணீர் கட்டடம்	9,993,810.18	
ஆலோசக மற்றும் தொழில்துரைசார்	960,000.00	
வேலையில் அமர்த்தல், ஆராய்ச்சி மற்றும் தொழில்முயற்சி		
தொழில் அபிவிருத்தி	311,585.00	
வேலையில் இருக்கும்போது பயிற்சி மற்றும் மேற்பார்வை	9,526,318.00	
தொழில்முயற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	1,000,748.25	
தோழிலில் அமர்த்தல்	931,487.61	
ஆராய்ச்சி மற்றும் கற்கை	376,228.00	
தனியார் அரச தொழில்முயற்சி	410,388.50	
ஏனைய தொழில்நடவடிக்கை செலவுகள்		
10% விலைக்கழிவு	64,000.00	
50 % பயிற்சி செலவுக்கான விலைக்கழிவு	2,844,650.00	
பரீட்சை மற்றும் மதிப்பீடு	6,190,224.46	

இலவசப் பாடநெறி	1,942,300.00	
சிறப்புக்கொடுப்பனவு	1,040,200.00	
2016- முழுநேர- அனுமதியுடன் விலகிய	3,074,889.00	
சட்டக் கட்டணம்	185,250.00	
பல்வித செலவுகள்	5,826,632.65	
தர முகாமைத்துவம் மற்றும் அங்கீகாரம்	1,950,254.30	
பருவச்சீட்டு	5,245,260.94	
விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	757,565.50	
உணவு கொடுப்பனவு	22,022,263.45	
கருவிகளும் நுகர்வுகளும்	2,431,255.30	
அறவிடப்படாத காப்புறுதி	298,500.00	
இலவசப் பாடநெறிக்களுக்கான காப்புறுதி	54,000.00	
விசேட செயற்றிட்டத்தின் அடிப்படையிலான செலவுகள்		
உயர் தரம் மாணவர்களுக்கான செலவுகள்	130,725.00	
SSDP இற்கான செலவுகள	153,114,359.42	
GIZ இற்கான செலவுகள்	609,531.99	
ILO இற்கான செலவுகள்	5,114,231.17	
வரவு செலவுக்கான செலவுகள்	23,608,531.18	
WUSC செயற்றிட்த்திற்கான செலவுகள்	865,256.00	
நிதிச் செலவு		
வங்கிக் கட்டணம்	207,089.01	
பயிற்சிப் பொருட்கள்	92,250,834.64	
ஆளணிப் பயிற்சி- அபிவிருத்தி	4,276,341.81	
மேம்படுத்தல் செலவுகள்	12,763,267.05	
தொழில் வழிகாட்டல்	2,348,003.18	
தேய்மானம்	397,269,169.33	
இலாப நட்டக் கணக்கு	752,188,530.98	
முந்திய வருடத்தின் சரிசெய்தல்		56,182,484.47
	11,413,158,273.99	11,413,158,273.99

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல.
My No. } වීරී/ඍ/
வீரீஏ/1/16/22

ඔබේ අංකය
உமது இல.
Your No. }

දිනය
திகதி
Date } 2018 පෙබරවාරි 28

தலைவர்,
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை.

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1995 இன் 12 ஆம் இலக்க இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. · இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. · No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் நாயகம் அலுவலகம்
Auditor General's Department
AGDSL

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 16

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நியமத்தின் 34 ஆம் பந்திக்கமைய ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் இயந்திர உபகரணங்கள் அவற்றின் நியாயப் பெறுமதியில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதுடன், துரிதமான மாற்றங்களுக்கு உட்படுமாயின் அவை வருடாந்தமும், அவ்வாறு கருத்திற்கொள்ளப்படக்கூடிய அளவில்லாத மாற்றங்கள் மாத்திரம் காணப்படுமாயின் அந்த உருப்படிகள் 3 வருடங்களுக்கு அல்லது 5 வருடங்களுக்கு ஒரு தடவை மீள்மதிப்பீடு செய்தல் போதுமானதென குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அதிகாரசபைக்கு சொந்தமாக காணப்பட்ட ரூபா 5,763,014,972 பெறுமதியான சொத்துக்களின் நியாயப்பெறுமதியினை கணக்கு வைப்பதற்காக 2008 ஆம் ஆண்டின் பின்னர் மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களுக்கமைய அகற்றப்படும் சொத்துக்களின் கிரயமானது உரிய சொத்துக் கணக்குகளிலிருந்து அகற்றுதல் கணக்கீட்டு கொள்கையான போதிலும், 2009 ஆம் ஆண்டின் பின்னர் அகற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதி குறித்த சொத்துக் கணக்குகளிலிருந்தும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலிருந்தும் அகற்றப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அவ்வாறு அகற்றப்பட்ட சொத்துக்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு ஆகியவற்றை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நாரஹேன்பிட்ட தேசிய தொழிற்பயிற்சி நிறுவனத்தின் பாதுகாப்பு மதிலை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 1,097,195 கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய செலவினங்கள் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இரண்டு மோட்டார் வாகனங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட மூலதன பழுதுபார்த்தல்களுக்காக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 929,427 தொகையான செலவினம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) திறன்கள் அபிவிருத்தி செயற்திட்டத்திற்குரிய நவீனமயப்படுத்தல் செலவினமான ரூபா 2,085,873 கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டின் 05 செலவினங்களுக்குரிய இரத்துச் செய்யப்பட்ட 75 காசோலைகளின் பெறுமதியான ரூபா 173,635 தொகையினை திரண்ட நிதியத்திற்கு சீராக்குவதற்கு பதிலாக, மீளாய்வாண்டிற்கான செலவினங்களில் கழித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) தனியார் தொலைபேசிக் கம்பனியொன்றுக்கு தொலைபேசிக் கட்டணங்களை செலுத்தும் போது 2014, 2015 மற்றும் 2016 ஆகிய வருடங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,818,537 தொகையான கழிவுகள் வருமானமாகக் கணக்கு வைக்கப்படாது. ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் செலுத்த வேண்டிய மீதியொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டினுள் அதிகாரசபையினால் பயிற்சி நிலையங்களின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி செய்யும் 06 ஒப்பந்தங்களுக்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 29,581,369 தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணங்கள், முற்பணங்களாக கணக்கு வைக்கப்படாமல் நடைமுறை வேலைகள் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காணப்படும் ரூபா 39,748,214 தொகையான பெற வேண்டிய மீதிகள் உள்ளடக்கப்பட்ட 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய பாடநெறிக் கட்டணங்கள் ரூபா 19,458,199 ஆக இருந்ததுடன், அவற்றுள் ரூபா 2,204,788 தொகை 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. எஞ்சிய ரூபா 17,253,411 தொகையில் ரூபா 10,277,809 தொகை 2017 திசெம்பர் 10 ஆந் திகதி வரையிலும் அறவிடப்படாது காணப்பட்டது.

(ஆ) தொழிற்பயிற்சி அமைச்சிடமிருந்து 16 வருடங்களாக மற்றும் 11 வருடங்களாக அறவிடப்பட வேண்டிய முறையே ரூபா 3,930,931 மற்றும் ரூபா 131,043 தொகையான கடன் மீதிகளை மீளாய்வாண்டினுள்ளும் அறவிடுவதற்கோ அல்லது அது தொடர்பில் ஏனைய பொருத்தமான நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஏனைய 11 அரச நிறுவனங்களில் 11 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 2,844,106 மீதியினுள் தற்போது மூடப்பட்டுள்ள லக்சல நிறுவனத்திலிருந்து அறவிடப்பட வேண்டியதாக காணப்படும் ரூபா 1,437,200 தொகையான மீதியொன்று அவதானிக்கப்பட்டது. எவ்வாறெனினும் நீண்ட காலமாக அறவிடப்பட வேண்டிய இவ்வாறான மீதிகள் தொடர்பில் அதிகாரசபை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காது ஒவ்வொரு வருடமும் முன்கொண்டு வரப்பட்டவாறு காணப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 130,578,519 ஆக இருந்ததுடன், அவற்றுள் 10,080,342 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும், ரூபா 4,854,746 தொகை 03 முதல் 05 வருடங்கள் வரையான காலமும் ரூபா 35,963,225 தொகை 01 முதல் 03

வருடங்கள் வரையான காலமாகவும் முன் கொண்டு வரப்பட்டவாறு காணப்பட்டதுடன், அந்த மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கே ஏனைய பொருத்தமான நடைமுறையொன்றினை மேற்கொள்ளவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை	
(i) VIII ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் பந்தி	அதிகாரசபையினால் மூன்றாம் நிலையிலுள்ள 21 பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு ரூபா 885,361 தொகையான மேலதிக நேர படிகள் செலுத்தப்பட்டிருந்தன.
(ii) IX ஆம் அத்தியாயத்தின் 2.2 ஆம் பிரிவு	மீளாய்வாண்டின் போது ரூபா 10,930,695 ஆன பகுதி நேர பயிற்சி உசாத்துணை கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக அறவிடப்பட வேண்டிய 10 சதவீதமான அரசிறை ரூபா 1,093,069 ஆன போதிலும், அதிகாரசபையால் ஆண்டினுள் ரூபா 594,733 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அதற்கமைய ரூபா 498,336 தொகையான அரசிறை அறவிடப்பட்டிராததுடன், அனைத்து பகுதி நேர பாடநெறிகளினதும் உசாத்துணை கட்டணங்களின் மீதும் அரசிறை அறவிடப்படுகின்றமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை		
(i) நிதிப்பிரமாணம் 104		இரத்மலானை தேசிய தொழிற்பயிற்சி நிலையத்தின் கணனி மென்பொருள் பாடநெறிக்குரிய 2 கணனி இயந்திரங்கள் 2015 சனவரி 15 ஆந் திகதி தொலைந்து போயிருந்ததுடன் அது தொடர்பில் உரிய பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ii) நிதிப்பிரமாணம் 110		தலைமை அலுவலகத்திலும் மாவட்ட அலுவலகங்களினதும் நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.
(iii) நிதிப்பிரமாணம் 188(2)		2009 ஆம் ஆண்டில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 49,644 தொகையான 2 காசோலைகள் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தேறாதிருந்த போதிலும், அது தொடர்பில் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(iv) நிதிப்பிரமாணம் 571		02 வருடங்களுக்கு மேற்பட்ட 30 ஒப்பந்ததாரர்கள் மற்றும் வழங்குநர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 4,980,200 தொகையான பிடிகாசு மற்றும் ரூபா 584,996 தொகையான மீள செலுத்தப்பட வேண்டிய வைப்புத் தொகைகளை தீர்ப்பனவு செய்வதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(இ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை		சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(ஈ)	2003 யூன் 02 ஆந் திகதிய பீஈஉ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1(vii) ஆம் பிரிவு	ஏதாவதொரு காரணத்தின் அடிப்படையில் பதில் கடமை நியமனம் வழங்கப்படுமானால் அது 03 மாதங்களை விஞ்சி வழங்கப்படக்கூடாத போதிலும் அதற்கு முரணாக 03 வருடங்கள் வரை பதில் கடமை நியமனங்கள் வழங்கப்பட்ட 03 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.
(உ)	2010 செப்தம்பர் 01 ஆந் திகதிய 446 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை	சுற்றறிக்கைக்கு முரணாக அதிகாரசபையில் சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் தனிப்பட்ட தொலைபேசிப் பட்டியல்களை ஊழியர்களின் சம்பளத்திலிருந்து மீளளிப்பு செய்யும் அடிப்படையில் கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரத்துடன் அதிகாரசபையால் மாதாந்தம் ரூபா 353,853 ஆன சராசரி தொகையொன்று தொலைபேசிக்காக செலவிடப்பட்டு 12 நாட்களின் பின்னர் சம்பளத்திலிருந்து மீளளிப்பு செய்யப்பட்டிருந்தது.

2.5 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

காப்புறுதி நிதியமொன்றை தாபிப்பதற்காக 2014 ஆம் ஆண்டு முதல் 2016 திசெம்பர் 31 வரை பயிலுநர்களிடமிருந்து ரூபா 500 படி சேகரித்து ரூபா 38,354,000 தொகை அதிகாரசபையின் வங்கிக் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட்டு, ஒரு வருடத்தினுள் அவற்றில் சுமார் ரூபா 500,000 நட்டஈடாக செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீ.எப்/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியமொன்றை தாபிப்பதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 33,280,068 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 75,332,249 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 108,612,317 ஆன அதிகரிப்பொன்று ஏற்பட்டிருந்தது. மீண்டெழும் செலவினங்களுக்கான திறைசேரி மானியம் ரூபா 124,473,000 இனாலும், ஏனைய வருமானம் ரூபா 16,898,073 இனாலும் அதிகரித்தமை மற்றும் மேம்படுத்தல் மற்றும் தொழில்சார் வழிகாட்டல் செலவினங்கள் ரூபா 5,763,323 இனாலும், தொழில் நிலைப்படுத்தல், ஆராய்ச்சி மற்றும் முயற்சியாண்மை செலவினம் ரூபா 4,060,356 இனால் குறைவடைந்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

நடப்பாண்டினதும் கடந்த 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2012 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளிலின் போது நிதி மிகையும் ஏனைய ஆண்டுகளில் பற்றாக்குறையையும் காண்பித்தது. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொண்ட பின்னர் நிறுவனத்தின் பங்களிப்பு 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை முறையே ரூபா 1,144,087,661, ரூபா 1,023,595,450, ரூபா 1,059,237,421, ரூபா 1,338,404,900 மற்றும் ரூபா 1,460,306,994 ஆக இருந்தது. அதற்கமைய 2013 ஆம் ஆண்டு முதல் நிறுவனத்தின் பங்களிப்பில் தொடர்ச்சியான அதிகரிப்பினை காண்பித்தது.

3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டிற்குரிய பாடநெறிக் கட்டண வருமானம் ரூபா 131,818,200 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், வருமானத்தை கணிப்பிடும் போது குறிப்பாக இனங்காணக்கூடியதாக இருந்த பாடநெறிக் கட்டணங்களின் விடுவிப்புகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பயிலுநர் விட்டுச்செல்லல் ஆகியவற்றின் கூட்டுத்தொகையான ரூபா 7,861,839 வருமானமாக இனங்காணப்பட்டு பின்னர் ஏனைய செயற்பாட்டு செலவினமாக பதிவழிக்கப்பட்டிருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1995 இன் 12 ஆம் இலக்க இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல் மற்றும் தொழிற்பயிற்சியொன்றை வழங்குதல், தேசிய வடிவமைப்பு பரிசோதனைகள் மற்றும் பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் சான்றிதழ்களை வழங்குதல், தொழிற்பயிற்சி தொடர்பான ஆராய்ச்சிகளை நடாத்துதலும் அபிவிருத்தி செய்தலும், அரசாங்க மற்றும் தனியார் துறையின் தொழிற்பயிற்சி நடவடிக்கைகளை தொடர்புபடுத்துதல், இலகுபடுத்தல் மற்றும் அவற்றிற்கு உதவுதல், வழிகாட்டியும் ஆலோசனையும், வேலைக்கமர்த்தல், ஊழிய சந்தையின் கேள்வி மற்றும் வழங்கல் தொடர்பில் ஆராய்சிகளை நடாத்துதல் மற்றும் தொழிற்பயிற்சிக்கு தேவையான தேசிய மற்றும் சர்வதேச பயிற்சி அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணிக் கொள்ளல் மற்றும் தொழிற்பயிற்சிக்காக தேவையான நபர்களை பயிற்றுவித்தல், தொடர்பினை ஏற்படுத்தல் மற்றும் இலகுபடுத்தல் போன்ற பணிகள் அதிகாரசபையின் பிரதான நோக்கங்களாகும்.

அதிகாரசபையினால் பல வருடங்களாக ஊழிய சந்தையின் கேள்வி மற்றும் வழங்கல் தொடர்பில் ஆராய்சிகள் மேற்கொள்ளப்பட்டிராததுடன், சர்வதேச தொடர்புகளை பேணிச் செல்லல் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டினுள் பல்வேறு 18 துறைகளுக்குரிய 133 பயிற்சி பாடநெறிகளுக்குரிய 2,584 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 35,460 பயிலுநர்களை இணைத்துக்கொள்ள திட்டமிடப்பட்டிருந்ததுடன், அதன் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட 1,952 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 31,537 பயிலுநர்கள் அல்லது இலக்கிடப்பட்ட எண்ணிக்கையில் 88 சதவீதம் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. அவற்றுள் பகுதிநேர பாடநெறிகளுக்காக 4,700 பயிலுநர்களை இணைத்துக்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 1,833 பயிலுநர்கள் மாத்திரம்

இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர். அதற்கமைய பகுதி நேர பாடநெறிக்கான இணைத்துக்கொள்ளல் இலக்கில் 39 சதவீதம் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

(ii) ஆரம்ப வாழ்க்கைத் தொழில்சார் பயிற்சி துறையொன்றல்லாத தகவல் தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் பல்லூடக தொழில்நுட்ப துறைகளுக்காக பயிலுநர்களை இணைத்துக்கொள்ளல் தொடர்பில் மீளாய்வாண்டின் போது நிறுவனத்தினால் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டிருந்ததுடன், ஆரம்ப தொழிற்பயிற்சி துறைக்கமைய பயிலுநர்களை இணைத்துக்கொள்ளல் தொடர்பில் குறைந்தளவான கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) தகவல் தொழில்நுட்ப தொலைத்தொடர்பு மற்றும் பல்லூடக தொழில்நுட்ப (IT Sector) துறைக்கு 2016 ஆம் ஆண்டிற்கான ஆட்சேர்ப்புகளில் 23 சதவீதம் அல்லது 7,439 ஆன கூடுதலான ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், கூடுதலான தொழிலுக்கமர்த்தலான 978 மின் இலத்திரனியல் மற்றும் மின்சார தொடர்பு துறைக்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கமைய தொழிற்சந்தையை நோக்காக கொண்ட பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(iv) 2016 ஆம் ஆண்டினுள் தொழிலுக்கமர்த்தல் துறையின் இலக்கிடப்பட்ட தொழிலுக்கமர்த்தல் எண்ணிக்கை 8,300 ஆக இருந்ததுடன், உள்ளபடியான தொழிலுக்கமர்த்தல் 6,052 அல்லது 63 சதவீதமாக இருந்தது.

(v) வெளிநாட்டு தொழிலுக்கமர்த்தல் இலக்கானது 41 சதவீதமாக இருந்ததுடன், உள்ளபடியான தொழிலுக்கமர்த்தல் 03 சதவீதம் மாத்திரமாக இருந்தமையால் வெளிநாட்டு தொழிற்சந்தை தொடர்பான நெகிழ்வுத்தன்மை குறைவாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(vi) அதிகாரசபையில் பயிற்சியினை பெற்று வருடாந்தம் வெயியேறும் பயிற்சி பெற்றோர் தொழிலுக்கமர்த்தப்படல் தொடர்பான பின்தொடர் நடவடிக்கையொன்று நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டிராததுடன், அது தொடர்பான தரவுக் கட்டமைப்பொன்றும் பேணப்பட்டிருக்கவில்லை.

4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலும் 08 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 106,100 தொகையான பணம் விதவைகள் மற்றும் அநாதைகள் நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்படாமல், விதவைகள் மற்றும் அநாதைகள் நிதியக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

4.3 செயற்பாட்டு தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையினால் பயிற்சி நடவடிக்கைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டு நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பயிற்சி உபகரணங்கள் என குறிப்பிடப்பட்டிருந்த 19 மோட்டார் வாகனங்கள் அதிகாரசபையின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், அதிகாரசபையினால் பயன்படுத்தப்பட்ட ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட முடியாத நிலையிலுள்ள 22 மோட்டார் வாகனங்கள் பயிற்சி நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்ததுடன், பயிற்சி நடவடிக்கைகளுக்காக வழங்குவதற்கு முன்னர் அந்த வாகனங்களின் பதிவு இலக்கங்கள் மோட்டார் வாகன பதிவு செய்தல் திணைக்களத்தினூடாக இரத்துச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திருகோணமலை மாவட்டத்தின் தொழிற்பயிற்சி நிலையங்களின் பரிசோதனையின் போது இனங்காணப்பட்ட குறைபாடுகள் பினவருமாறு.

(i) முன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் வழிகாட்டிக்மைய தேசிய தொழிற் திறன் சான்றிதழினை (NVQ) வழங்கும் அனைத்து பாடநெறிகளிலும், பாடநெறிகளின் அங்கீகாரமளிக்கும் நடவடிக்கைகள் (accreditation) 03 வருடங்களுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள தொழிற்பயிற்சி நிறுவனங்களில் நடாத்திச் செல்லப்படும் 03 பாடநெறிகளுக்கு அங்கீகாரமளிக்க வேண்டிய காலப்பகுதி 06 மாதங்களை கடந்திருந்த போதிலும், உரிய அங்கீகாரம் 2017 திசெம்பர் 12 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) புல்மோட்டை கிராமிய தொழிற்பயிற்சி நிலையத்தின் தொழிலுநுட்ப வல்லுநர் பாடநெறி (1 வருட) 2016 ஆகஸ்ட் 08 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு தேவையான பயிற்சி பொருட்கள் கணக்காய்வு திகதியான 2017 பெப்ரவரி 01 ஆந் திகதி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iii) திருகோணமலை மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தினதும் கிராமிய தொழிற்பயிற்சி நிலையத்தினதும் பயிற்சி பாடநெறி வசதிகளை பரிசோதனை செய்த போது மின்சார வசதிகள், போதியளவான கதிரைகளின் எண்ணிக்கை மற்றும் போதியளவான கணனிகள் வழங்கப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(iv) தெரிவுப் பரிசோதனையொன்றில் வெளிப்படுத்தப்பட்டவாறு திருகோணமலை மாவட்டத்தின் 03 பயிற்சி நிலையங்களில் பாடநெறிகளை தொடரும் தமிழ் மொழிமூல பயிலுநர்களுக்கு 2017 ஆம் ஆண்டிற்கான முதலாவது அரையாண்டிற்கான நாளாந்த பயிற்சி அறிக்கை புத்தகங்கள் 2017 பெப்ரவரி 01 ஆந் திகதி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், 02 பயிற்சி நிலையங்களில் மின் தொழில்நுட்பவியலாளர் பாடநெறிகளை தொடரும் தமிழ் பயிலுநர்களுக்கு சிங்கள நாளாந்த புத்தகங்கள் மற்றும் நிழற்படமெடுக்கப்பட்ட தமிழ் மொழி மூல புத்தகங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(v) அக்போபுர கிராமிய தொழிற்பயிற்சி நிலையத்தின் தகவல் தொழில்நுட்ப பாடநெறிக்குரிய 12 யூபீஎஸ் (UPS) செயலற்றுக் காணப்பட்மையால் கணனிகளின் நிலவுகை பாதுகாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்காக வருடாந்தம் திறந்த கூறுவிலைகளை கோருவதன் மூலம் ஒப்பந்ததாரர்கள் தெரிவு செய்யப்பட வேண்டிய போதிலும், 2011 ஆம் ஆண்டு முதல் 2017 செப்தம்பர் 30 ஆந் திகதி வரையிலும் நாரஹேன்பிட்டிய தேசிய தொழிற்பயிற்சி நிலையத்தில் சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்லல் பெறுகைகள் நடைமுறைகளுக்கு புறம்பாக ஒரே நபருக்கு வழங்கப்பட்டிருந்தது.

4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

உலக தொழிலாளர் அமைப்பினால் வவுனியா, மன்னார், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களின் தொழிற்பயிற்சி நிலையங்களை கட்டியெழுப்புவதற்காக 2016 ஆம் ஆண்டினுள் வழங்கப்பட்டிருந்த ரூபா 20,271,540 தொகையான பணத்தில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 1,355,755 தொகை அதிகாரசபையின் 31 உத்தியோகத்தர்களிடையே கொடுப்பனவுகளாக பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதிலும், கொடுப்பனவிலான முறையற்ற தன்மை காரணமாக அதனை மீள அறவிடுவதற்கு தலைவரால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2017 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் அவற்றுள் ரூபா 272,489 தொகை தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது.

4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 1,500,000 கிரயமான மற்றும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பதிவழிக்கப்பட்ட பெறுமதி ரூபா 150,169 தொகையான பேரூந்து இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பாவனைக்கு எடுக்கப்படாது அநுராதபுரம் மாவட்ட அலுவலக வளாகத்திலும், ரூபா 1,100,000 கிரயமான மற்றும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பதிவழிக்கப்பட்ட பெறுமதி ரூபா 110,124 தொகையான மற்றுமொரு பேரூந்து ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாகவும் பாவனைக்கு எடுக்கப்படாது அம்பாறை நிந்தவூர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்திலும் தரித்து வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) தெரிவுப் பரிசோதனையொன்றின் போது வெளிப்படுத்தப்பட்டவாறு பெறுமதி இனங்காண முடியாத அம்பாறை மற்றும் காலி மாவட்டங்களின் 12 பாடநெறிகளுக்குரிய 1,849 பயிற்சி உபகரண விடயங்கள், அந்த பாடநெறிகள் நடாத்தப்படாமையால் விளைவற்றுக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(இ) 2017 பெப்ரவரி 02 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது தெரிவுப் பரிசோதனையொன்றின் போது சேருவாவில் கிராமிய பயிற்சி நிலையத்தில் விவசாய உபகரணங்கள், நீர்க்குழாய் தொழில்நுட்ப பாடநெறிகளுக்குரிய பயிற்சி உபகரணங்கள் மற்றும் வெருகல் பயிற்சி நிலையத்தில் உருக்கியொட்டுதல் கலை பாடநெறிக்குரிய உபகரணங்கள் விரிவுரையாளர்கள் இன்மையால் பாடநெறிகளை நடாத்தாமையின் காரணத்தால்

விளைவற்றுக் காணப்பட்டன. 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் அந்த பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கு எவ்வித திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) திறன்கள் துறையின் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளினுள் குச்சவெளி மற்றும் காரைநகர் ஹோட்டல் பாடசாலைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 10,481,619 பெறுமதியான பயிற்சி உபகரணங்கள், அந்த நிலையங்களின் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிராமையால், 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது விளைவற்றுக் காணப்பட்டது. சில பயிற்சி உபகரணங்களின் உத்தரவாதக் காலம் உபகரணம் பயன்படுத்தப்படாது நிறைவடைந்திருந்ததுடன், சில உபகரணங்களின் துறுப்பிடித்தல் மற்றும் நிறம் மங்குதலுக்கு உள்ளாகியிருந்தன.

(உ) (i) முன்மாதிரி ஹோட்டலொன்றாக பேணும் தேவைப்பாடு தொடர்பில் மதிப்பாய்வொன்றினை மேற்கொள்ளாது ஹோட்டல் பயிற்சி துறைக்குரிய 04 பாடநெறிகள் நடாத்திச் செல்லப்பட்ட காலி மாவட்டத்தின் அஹங்கமவில் அமைக்கப்பட்டிருந்த ஹோட்டல் பாடசாலை நீச்சல் குளத்துடனான 03 நட்சத்திர மட்டத்திலான ஹோட்டலொன்றாக நவீனமயப்படுத்துவதற்காக கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2014 ஒக்தோபர் 06 ஆந் திகதியளவில் ரூபா 110,355,000 ஆன பெறுமதிக்கு 240 நாட்களுக்குள் பூர்த்தி செய்வதற்காக தனியார் ஒப்பந்ததாரர் ஒருவருக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

(ii) மேலும் முன்று நட்சத்திர மட்டத்திலான அந்த ஹோட்டலின் அதி சொகுசு வசதிகளுடனான ஹோட்டலொன்றாக மேலும் மாற்றங்களை மேற்கொள்வதற்காக 2016 ஏப்ரல் 29 ஆந் திகதி ரூபா 12,362,223 தொகையான மேலதிக மதிப்பீடொன்றிற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2017 யூன் 30 ஆந் திகதியளவில் இந்த நிர்மாணங்களுக்காக ரூபா 1,011,801,679 செலவிடப்பட்டிருந்த போதிலும், அடிக்கடி திட்டத்தினை மாற்றுதல் மற்றும் ஒப்பந்ததாரரின் குறைபாடுகளின் காரணமாக 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், முன்று நட்சத்திர ஹோட்டலொன்றை நடாத்திச் செல்வதற்கு தேவையான வளங்கள் அதிகாரசபையிடம் காணப்படாமையால் அது அரச தனியார் கூட்டு முயற்சியொன்றாக நடாத்திச் செல்வதற்கு தனியார் துறையின் முதலீட்டாளர் ஒருவரை தெரிவு செய்வதற்காக 2017 மார்ச் 22 ஆந் திகதி

பத்திரிகை அறிவித்தலொன்றின் மூலம் விலைக்கேள்வி கோரப்பட்டிருந்தது.

(iii) முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய நிர்மாணங்கள் தொடர்பில் சரியாக இனங்காணாது அஹங்கம ஹோட்டல் பாடசாலையை முன்மாதிரி ஹோட்டல் ஒன்றாக நவீனமயப்படுத்தியமையின் காரணத்தால் குறித்த ஹோட்டல் பாடசாலையினை மற்றொரு காணியில் நிர்மாணித்தல் 2017 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஹோட்டல் பாடசாலையின் நிர்மாணம் தாமதமடைந்தமையால் 2014 ஆம் ஆண்டின் போது இடைநிறுத்தப்பட்ட நான்கு பாடநெறிகள் 2017 ஆம் ஆண்டு வரையிலும் மீள ஆரம்பிக்க முடியாமையால் அந்த ஹோட்டல் பாடசாலையின் பயன்பாட்டிற்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 8,605,519 பெறுமதியான பயிற்சி உபகரணங்கள் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது. நிதிகளை வழங்கியிருந்த செயற்திட்டத்தினதும் அதிகாரசபையினதும் நோக்கங்கள் நிறைவேறியிருக்கவில்லை.

4.6 நிதியத்தின் குறைவான பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக ஈடுபடுத்தப்படாது வங்கியின் 05 நடைமுறைக் கணக்குகளில் ரூபா 331,133 கூட்டுத்தொகையான பணம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் 2011 ஆம் ஆண்டின் போது பயிற்சி உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கியிருந்த ரூபா 9,815,342 தொகை உரிய பணிகளுக்காக பயன்படுத்துவதற்கு அல்லது தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது செலுத்த வேண்டிய செயற்திட்ட நிதியத்தின் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

4.7 சிக்களமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2016 ஆம் ஆண்டினுள் பயிற்சி உபகரணங்களை கொள்வனவு செய்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது நொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் 10 சந்தர்ப்பங்களில் ஆகக்குறைந்த விலைக்கேள்வியினை சமர்ப்பித்திருந்த பெறுகைகள் ஏற்றுக்கொள்ளப்படாமையால், முன்வைக்கப்பட்டிருந்த காரணங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்ததுடன், அதற்கான ஆதாரக் கூடிய விலைக்கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தமையால், அந்த கொள்வனவுகளுக்காக ரூபா 3,220,900 தொகையினை கூடுதலாக செலுத்த அதிகார சபைக்கு நேர்ந்திருந்தது.

4.8 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரசபையின் வளங்கள்

திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சிற்கு அதிகாரசபையின் மூன்று உத்தியோகத்தர்களும் அதற்குரிய இரண்டு வாகனங்களும் வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக திறன் சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு ஒரு உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டிருந்தார். அதற்காக அதிகாரசபை ஆண்டினுள் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,477,596 தொகையான செலவினத்தை மேற்கொண்டிருந்தது.

4.9 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிருவனத்தின் பணிப்பாளர் (நிதி) பதவி 2015 ஏப்ரல் 30 ஆந் திகதி முதல் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் 2015 மே 05 ஆந் திகதி முதல் இந்தப் பதவியின் முழுநேர பதில் கடமைக்காக பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டிருந்தமையின் காரணத்தால் உள்ளகக் கணக்காய்வின் சுவாதீனத்துமாய் தொடர்பில் கணக்காய்வின் போது சிக்கலுக்குரியதாக காணப்பட்டது.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 2,361 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 1,814 ஆனமையால் வெற்றிடங்கள் 547 ஆகக் காணப்பட்டது. வெற்றிடங்களில் 269 விரிவுரையாளர்கள் இருந்தமையினால் இலக்கிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்ட எண்ணிக்கையை நடாத்துவதற்கு முடியாதிருந்தது.

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் ஒப்பந்த அடிப்படையில் மதியுரையாளர்களை இணைத்துக் கொள்வதற்கு நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராத போது, தகுதியினை பூர்த்தி செய்யாத மதியுரையாளர்கள் தொடர்ந்தும் ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டு, பின்னர் ஒப்பந்தக் காலத்தினை தகுதிகாண் காலமாக கருதி தகுதியின்றி பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருந்தனர். அவ்வாறு ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறு ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டு 03 வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக் காலத்துடன் 80 விரிவுரை உத்தியோகத்தர்கள் 2017 சனவரி மாதத்தின் போது மதியுரையாளர்களாக நிரந்தரமாக்கப்பட்டிருந்தனர்.

(ஈ) அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் 5.1.1 ஆம் பிரிவின் பிரகாரம் விரிவுரையாளர் பதவிக்காக ஆட்சேர்க்கும் போது தேசிய தொழிற் தகைமையின் 5 ஆம் மட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்தின் கீழ் பெறப்பட்ட தொழில்நுட்ப விஞ்ஞான பாடநெறியொன்றைப் பின்பற்றி சித்திபெற்ற சான்றிதழொன்று பெறப்பட வேண்டியிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டின் போது ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்ட விரிவுரையாளர்கள் தொடர்பான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது இணைத்துக்கொள்ளப்பட்ட 91 விரிவுரையாளர்களில் 23 பேர் அந்த தகைமைகளை அடையாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் பணிப்பாளர் (மனிதவள மற்றும் நிர்வாகம்) பதவிக்காக ஆட்சேர்ப்பினைச் செய்யும் போது வெளிவாரி மற்றும் உள்ளக விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு தாபனவிதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 5.2.6 ஆம் பிரிவின் பிரகாரம் குறிப்பிட்ட உத்தியோகபூர்வ நேர் முகப்பரீட்சை சபையொன்றின் மூலம் நிர்ணயிக்கப்படுகின்ற புள்ளி வழங்கும் திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணானதாக 2015 யூன் 05 ஆந் திகதிய அதிகாரசபையின் தலைவரின் சிபாரிசுடன் பணிப்பாளர் சபையின் 08 அங்கத்தவர்களின் கையொப்பத்துடனான கடிதத்தின் பிரகாரம் அப்பதவிக்காக 2015 ஏப்ரல் 22 ஆந் திகதி முதல் உத்தியோகத்தரொருவர் முறையற்ற வகையில் நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஊ) நிறுவனத்தின் ஊகத்துறை தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படாதுள்ள போது 2011 ஆம் ஆண்டின் போது அந்த துறைக்காக அடிப்படைத் தகைமைகளை பூர்த்தி செய்யாத பெண்

விரிவுரையாளர் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தார். விரிவுரையாளர் பதவிக்குரிய பணிப்பொறுப்புக்கள் அவரால் நிறைவேற்றப்படாதிருக்கும் போது தொடர்ந்தும் சேவை நீடிப்பும் வழங்கப்பட்டிருந்தது. பின்னர் அதிகாரசபையில் பெற்றுக்கொண்ட பயிற்சியின் அடிப்படையில் 2014 ஆம் ஆண்டின் போது தகவல் தொழில்நுட்ப விரிவுரையாளராக மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தார். அப் பெண் உத்தியோகத்தர் அந்த துறையினதும் பணிப்பொறுப்புக்களை முறையாக நிறைவேற்றவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(எ) 2013 திசெம்பர் 17 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் தகவல்களுக்கமைய ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட ரீதியில் உருவாக்கப்பட்ட (MA 1-2) சம்பள படிநிலையின் கீழ் அடிப்படை தகைமையினை பெறாது ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட விரிவுரையாளர்களை நிரந்தரமாக்கி முகாமைத்துவ உதவி - தொழில்நுட்பமல்லாத (MA 1-2) சேவைத் தொகுதியில் தொடர்ந்தும் பேணிச் செல்லப்பட்டிருந்தது.

4.10 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நடைமுறை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நாராஹேன்பிட்டிய தேசிய தொழிற்பயிற்சி நிலையத்தின் எல்லை மதிலை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,781,424 பெறுமதியான ஒப்பந்த உடன்படிக்கையொன்று 2016 யூலை 29 ஆந் திகதி ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்ததுடன், நிர்மாணம் மற்றும் நிர்மாண அளவிடைப் பத்திரத்திற்கமைய நிலத்தை தயார்படுத்துவதற்காக 14 மண் கியூப்களை நிரப்புவதற்கு பதிலாக ABC கியூப்கள் 16.16 நிரப்புதலை தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு 2016 திசெம்பர் 26 ஆந் திகதி பரிந்துரை செய்திருந்தது. நிர்மாண மேற்பார்வை செய்த தொழில்நுட்ப உத்தியோகத்தரால் ஒப்பந்ததாரர் சமர்ப்பித்திருந்த ரூபா 1,280,140 தொகையான இறுதி பற்றுச்சீட்டு சான்றுபடுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டு நிறுவனத்தினால் கட்டிடங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவகத்தின் நிலத்தினை தயார்படுத்தல் தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கைக்கமைய ABC இடுவதற்கு பதிலாக செங்கல் மற்றும் கற்கள் இடப்பட்டு நிலம் தயாரிக்கப்பட்டிருந்ததாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில்

பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) (i) திருகோணமலை குச்சவெளி ஹோட்டல் பாடசாலையின் நிர்மாண ஒப்பந்தம் 365 நாட்களுக்குள் பூர்த்தி செய்வதற்காக 2014 திசெம்பர் 23 ஆந் திகதி ரூபா 169,164,622 ஒப்பந்த பெறுமதியுடைய ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. எனினும் 2017 பெப்ரவரி 03 ஆந் திகதி வரையிலும் அதற்காக 772 நாட்கள் கடந்திருந்த போதிலும் அதன் நிர்மாண நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) கணக்காய்வு திகதியான 2017 செப்தம்பர் 29 ஆந் திகதி வரையிலும் அந்த காணியின் சட்டரீதியான உரித்து அதிகாரசபையால் கையேற்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மேற்படி கட்டிடத்தை நிர்மாணிக்கும் போது மாவட்ட அளவையாளரால் அடையாளமிடப்பட்ட காணிக்கு புறம்பாக அமைந்துள்ள இலங்கை சுற்றுலா சபைக்குரிய காணியின் ஒரு பகுதியும் உள்ளடங்கும் வகையில் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படுவதாக பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(iii) காணியின் ஆரம்ப மண் மற்றும் நிலத்தடி நீர் பரிசோதனையொன்றினை மேற்கொண்டு மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர் ஒருவரால் அமைக்கப்பட்ட நிலத்திலிருந்த ஒரு மீட்டர் உயரத்திற்கு மண் நிரப்பி நிர்மாணங்களை மேற்கொள்ளுமாறு வழங்கப்பட்டிருந்த அறிவுரையினை அடிப்படையாகக் கொண்டு 11,500 கன மீட்டர் மண் இடப்பட்டு நிலத்தை நிரப்புவதற்காக ஒரு கன மீட்டருக்கு ரூபா 1,100 படியாக ரூபா 12,650,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் பரிந்துரைகள் அல்லது பெறுகைகள் குழுவின் அங்கீகாரமின்றி கட்டுமான பூமியில் மண் நிரப்புவதற்குப் பதிலாக அடிப்பாசிகளை அகற்றி 636.34 கன மீட்டர் கல்லுடைத்தல் இடம்பெற்றிருந்ததாக 2017 பெப்ரவரி 17 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. அதற்காக ரூபா 7,884,253 ஒப்பந்த நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

(iv) தாழ்வான நிலப்பகுதியில் நிர்மாணங்கள் இடம்பெற்றிருந்தமையால் இலகுவில் வெள்ள நீர் அபாயத்திற்கு உட்படக் கூடுமென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) (i) மிரிஜ்ஜவில தேசிய தொழிற்பயிற்சி நிலையத்திற்கு வேலைத்தளக் கட்டிடமொன்றினை நிர்மாணிப்பதற்காக 150 நாட்களுக்குள் பூர்த்தி செய்வதற்கு தனியார் கம்பனியொன்றுடன் ரூபா 42,613,557 பெறுமதிக்கு 2013 ஒக்தோபர் 07 ஆந் திகதி ஒப்பந்த உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், 02 கால நீடிப்புகளுடன் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும் அத்திகதியில் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிராரமையால் அதிகாரசபையினால் 2015 சனவரி 05 ஆந் திகதி முதல் நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன், அந்த தீர்மானத்திற்கு உடன்படாத ஒப்பந்ததார கம்பனி இணக்கச் சபையொன்றிற்கு இந்த சம்பவத்தை முன்வைத்திருந்தது. 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் இந்த முரண்பாடு தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ii) எவ்வாறெனினும், நிர்மாணப்பணிகள் இடைநிறுத்தப்பட்டதன் பின்னர், அதிகாரசபையால் நியமிக்கப்பட்ட உசாத்துணை நிறுவனமொன்றின் அறிவுரைகளுக்கமைய, அதிகாரசபையினால் 2015 ஒக்தோபர் 25 ஆந் திகதி தயாரிக்கப்பட்டிருந்த அறிக்கைக்கமைய, ரூபா 21,765,110 பெறுமதியான செய் வேலைப் பெறுமதியில் (வற் உள்ளடங்கலாக) ரூபா 16,957,562 தொகையான பட்டியல் கொடுப்பனவுகள் மற்றும் தொழிலாரம்பிப்பு முற்பணங்களும் உடன்படிக்கையின் பிரகாரம் எஞ்சிய பணிகளுக்காக 25 சதவீதமான மிகை அறவீடு ரூபா 6,022,991 தாமதக் கட்டணங்கள் மற்றும் ஏனைய அறவீடுகளான ரூபா 2,603,557 உள்ளடங்கலாக ரூபா 25,584,110 கூட்டுத்தொகை கழிக்கப்பட்டதன் பின்னர் ஒப்பந்த கம்பனியிடமிருந்து ரூபா 3,819,000 தொகை மீள அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது.

(iii) நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வதற்காக 2016 ஏப்ரல் 08 ஆந் திகதி மீண்டும் விலைக்கேள்வி கோரப்பட்டிருந்த போதிலும், நிர்மாணம் மேற்கொண்ட ஆரம்ப ஒப்பந்ததாரர் தொடர்பில் இறுதித் தீர்மானமொன்றிற்கு வந்திராமையால், இரண்டாவது முறையாக கோரப்பட்ட விலைக்கேள்வி கோரலின் மதிப்பீட்டு பணிகள் 2016 ஒக்தோபர் 27 ஆந் திகதி இடம்பெற்ற பெறுகைகள் குழுவினால் இடைநிறுவத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ஒப்பந்தத்தின் நிர்மாண பணிகள் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தாமதமடைந்திருந்தது.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்திக்கமைய நிதிக்கூற்றுக்களுடன் 2016 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையின் வரைபு அறிக்கையொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

5.2 கூட்டிணைந்த திட்டம்

2014 - 2018 ஆம் ஆண்டிற்காக அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டம் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

5.3 செயல்நடவடிக்கை திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயல்நடவடிக்கை திட்டத்திற்கமைய அதிகாரசபையினால் ஆண்டினுள் 99 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 1,285 பயிலுநர்களை இணைத்துக்கொள்ள இலக்கிடப்பட்டிருந்த போதிலும், அந்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையினால் திட்டமிடப்பட்டிராத 12 நிகழ்ச்சித்திட்டங்கள் ஆண்டினுள் நடைமுறைப்படுத்தப்பட்டு, அதற்காக 294 பயிலுநர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

5.4 உள்ளகக் கணக்காய்வு

முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(i) ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 133 என்பவைகளில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்பட்டு 12 உத்தியோகத்தர்கள் இணைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தை திட்டமிடல், அமுல்படுத்துதல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் 2012-2016 கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் மற்றும்

இலக்குகள் ஆகியவற்றை அடைந்து கொள்ளலின் செயன்முன்னேற்றம் தொடர்பில் கவனம் செலுத்தி கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

5.5 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

எனது முன்னைய அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பின்வரும் குறைபாடுகள் தொடர்பில் அதிகாரசபை எவ்விதமான நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(அ) 2003 ஆம் ஆண்டு விபத்திற்குட்பட்ட வாகனமொன்று தொடர்பாக அதற்கு 06 வருடங்களின் பின்னர் 2009 பெப்ரவரி மாதத்தின் போது நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவின் பரிந்துரைகளுக்கமைய, விபத்தினால் ஏற்பட்ட ரூபா 421,000 தொகையாக நட்டத்தை அறவிடுவதற்கு 2017 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையின் பிரதி பணிப்பாளரொருவர் தமது நாளாந்த பதவிக்கு புறம்பாக 2006 சனவரி 17 ஆந் திகதி முதல் 2014 ஆம் ஆண்டு வரை மத்திய கலாசார நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையின் அங்கத்தவர் மற்றும் செயற்பாட்டு பணிப்பாளர் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக அந்த நிதியத்திலிருந்து ரூபா 5,444,015 தொகையை பெற்றுக் கொண்டிருந்தமை தொடர்பில் 2014 செப்தம்பர் 12 ஆந் திகதி இடம்பெற்ற இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை தொடர்பான பொது முயற்சிகள் குழுவின் சந்தர்ப்பத்தில் சனாதிபதி செயலாளரை வினவி அறிவுரைகளை பெற்றுக்கொள்ளுமாறு செயலாளருக்கு கட்டளையிட்டிருந்த போதிலும், அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் தகைமைகள் அல்லது அனுபவங்கள் பூர்த்தி செய்யாதிருந்த பணிப்பாளர் நாயகம் பதவி உள்ளடங்கலான நிறைவேற்று மட்டத்திலான 06 பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத உதவி பணிப்பாளர் (நிதி) பதவிக்காகவும் உத்தியோகத்தர் ஒருவர் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தார். அந்த நியமனங்கள் தொடர்பில் முன்னாள் நீதிபதியொருவரின் மூலம் 2015 ஆம் ஆண்டின் போது விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு வெளியிடப்பட்ட அறிக்கையில் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் 2017 திசெம்பர் 12 ஆந் திகதி வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2011 ஆம் ஆண்டின் போது உலக சுற்றுலா தினத்தை கொண்டாடுவதற்கு திட்டமிட்டு நிறுவனத்திற்கு செலுத்துவதற்காக 2012 பெப்ரவரி மாதத்தின் போது ரூபா 7,500,000 தொகை இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் நிறுவனத்திடமிருந்து கிடைத்திருந்தது. குறித்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அவற்றுள் எஞ்சிய ரூபா 1,000,000 தொகை கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரமின்றி 2015 ஆம் ஆண்டின் போது அதிகாரசபையின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அதற்கான அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நிதி மோசடியின் அடிப்படையில் பணி நீக்கம் செய்யப்பட்டு வழக்கு தொடரப்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவருக்கு அங்கீகாரமின்றி 2008 ஆம் ஆண்டின் போது சம்பளமாக ரூபா 1,711,961 செலுத்தப்பட்டிருந்ததுடன், இவ்வாறு கவனயீனமான முறையில் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் தொடர்பில் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கைகள் மீளாய்வாண்டு வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2012 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டு நிலையான சொத்துக்களுக்காக தனியார் நிறுவனமொன்றிற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,875,747 தொகையானது பெறுகைகள் நடைமுறையிலான குறைபாடுகளின் காரணமாக ஏற்பட்டிருந்த சர்ச்சைக்குரிய நிலமையின் அடிப்படையில் ஆண்டினுள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

5.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினத்தை உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களுடன் ஒப்பிடும் போது 78 சதவீதம் முதல் 1,363 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்பட வேண்டியுள்ளது.

முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்	அவதானிப்புகள்
(அ) பதவியணியினர் நிர்வாகம்	- ஆட்சேர்ப்பில் ஆகக் குறைந்த தகைமையைப் பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தமை.
	- நேர்முகப்பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சை சபைகள் முறையாக அமுல்படுத்தப்படாமை
	- முறையான இடமாற்றத்திட்டமொன்று அமுல்படுத்தப்படாமை
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்	- முறையான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்படாமை
	- சொத்துக்களை இனங்காணும் குறியீடுகள் பயன்படுத்தப்படாமை
	- விளைவற்ற சொத்துக்கள் காணப்பட்டமை
	- சகல சொத்துக்களும் பொருட்பதிவேடுகளுக்கு எடுக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்படாமை மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை.
	- கைத்தவிர்ப்பு செய்யப்பட்ட சொத்துக்கள், சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து அகற்றப்பட்டிராமை.
(இ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு	- பயிலுனர் படி பெற்றமைக்கு பயிலுனர்களின் உறுதிப்படுத்தலொன்று பெறப்படாமை.
	- படிகள் கணிப்பிடப்படும் முறைமையில் வேறுபாடு காணப்பட்டமை.
	- பாடநெறிக் கட்டணம் வங்கியிலிடப்படாமல் விரிவுரையாளர்களினால் பணமாகவே

பெற்றுக்கொள்ள அனுமதி பெற்றிருந்தமை.

- சகல பகுதிநேர பாடநெறிகளுக்காகவும் அரசிறை அறவிடப்பட்டமை உறுதிப்படுத்தப்படாமை.

- அரசிறை ஏனைய வருமானமொன்றாக இனங்கண்டு கணக்குகளில் வைக்கப்படாமை

(ஈ) நிதிக் கட்டுப்பாடு

- உள்ளகக் கட்டுப்பாடொன்று ஏற்படும் வகையில் பணிப்பொறுப்புக்களை உத்தியோகத்தர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிராமை.

- மேற்பார்வை நடவடிக்கைகள் உரிய பிரகாரம் அமுல்படுத்தப்படாமை

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம். காமினி விஜேசிங்ஹ

கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை- 2016 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் பற்றி 1971ஆம் இலக்கம் கொண்ட நிதிச் சட்டத்தின் 14(2)சீ பிரிவின் பிரகாரம் தலைமை கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கைக்குரிய தற்கால நிலைமை

2.2.1. (அ) 2018.03.31 ஆம் திகதியாகும் போது அதிகார சபைக்குச் சொந்தமான அனைத்து நிலையான சொத்துக்களின் விபரங்கள் நிலையான சொத்து பதிவேட்டில் உள்ளடக்கி நிறைவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை 90% வீதத்திற்கு கூடுதலானவை பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.2.1. (ஆ) 2018 ஆம் ஆண்டு இறுதிக் கணக்கு தயாரிக்கப்படும் பொழுது சரிசெய்யப்படும்.

2.2.2 (அ) குறித்த விசாரணைகள் நடைபெற்ற வண்ணமுள்ளதுடன் அது நிறைவுபெற்ற பின்னர் துரிதமாக பெறுமதியை சரியாக அடையாளம் கண்டு தேவையான சீர்செய்தல் செய்யலாம்.

2.2.2 (ஆ) 2017 ஆம் ஆண்டு கணக்குகளில் சீர்செய்யப்பட்டுள்ளது.

2.2.2 (இ) ளுளுனுீ செயற்றிட்டம் பணம் அடிப்படையில் (Cash Basis) கணக்குகள் பராமரிக்கப்படுவதால் ளுளுனுீ செயற்றிட்டம் மூலம் மீளளிப்பு செய்யப்படும் செலவுகள் அதிகார சபை மூலம் திரண்ட செலவுகளாக வேறுபடுத்தல் செய்யப்படமாட்டாது.

2.2.2 (ஈ) இது வரையில் அனைத்து சீர்செய்தல் செய்யப்பட்டுள்ளது.

2.2.2 (உ) உரிய சீர்செய்தல் செய்யப்பட்டுள்ளதால் முன்னால் மீதி காணப்பட்டாது.

2.2.2 (ஊ) 2017 ஆம் ஆண்டில் சரிசெய்யப்பட்டுள்ளது. முன்வருகின்ற வருடங்களில் இவ்வாறான சந்தர்ப்பங்களின்போது இதன்பிரகாரம் செயற்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.3 (அ) தீர்க்கப்பட்டுள்ளது.

2.3 (ஆ) ரூபா 5 இலச்சத்திற்கு கூடுதலான பெறுமதிகளை நீக்குவதற்காக இது வரை திறைசேரி அனுமதி கிடைக்கப்படவில்லை. ரூபா 5 இலச்சத்திற்கு குறைவான பெறுமதிகள் இதுவரையில் புத்தகங்களில் நீக்கப்பட்டுள்ளது.

2.3 (இ) ரூபா 5 இலச்சத்திற்கு கூடுதலான பெறுமதிகளை நீக்குவதற்காக இது வரை திறைசேரி அனுமதி கிடைக்கப்படவில்லை. ரூபா 5 இலச்சத்திற்கு குறைவான பெறுமதிகள் இதுவரையில் புத்தகங்களில் நீக்கப்பட்டுள்ளது.

2.3 (ஈ) நானாவித செயற்றிட்ட நிதியங்களுக்குள் இருக்கும் TVEC நிறுவனத்திற்குரிய ரூபா மில்லியன் 9.8 தீர்க்கப்படுவதற்கு மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட வண்ணமுள்ளது.

2.4 (அ) (i) அதிகார சபையில் மூன்றாம்நிலை மட்டத்திற்குரிய உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேர கொடுப்பனவு செலுத்தப்பட்டிருப்பது முகாமைத்துவச் சேவை திணைக்களத்தின் அனுமதியுடனாகும். (இணைப்பிதழ் 01)
அதன் பின்னர் 2016.04.25 ஆம் திகதிய 2016/02 முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் மூன்றாம்நிலை மட்டத்திற்குரிய உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேர கொடுப்பனவு செலுத்தல் நிறுத்தப்பட்டுள்ளது.

2.4 (அ) (ii) உரிய ஆலோசனைகள் நடைமுறைப்படுத்தப்பட்ட வண்ணமுள்ளது.
2.4 (ஆ) (i) நிதி பிரமாணக்குறிப்பு 104 இன் பிரகாரம் விசாரணை ஒன்றை நடாத்தி கணிணி இயந்திரங்களின் பெறுமதிகளை உரிய உத்தியோகத்தர்களிடம் இருந்து அறிவிட்டுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது
2.4 (ஆ)(ii) உரிய ஆலோசனைகள் நடைமுறைப்படுத்தப்பட்ட வண்ணமுள்ளது

2.4 (ஆ) (iii) தகவல்கள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்ட வண்ணமுள்ளது.

2.4 (இ) (iv) விண்ணப்பித்தலுக்கு அமைய கொடுப்பனவு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படடும்.

2.4 (ஈ) தயாரிக்கப்பட்ட வண்ணமுள்ளது.

2.4 (உ) திரு.ராமதாஸ் அவர்கள் (நிதி உத்தியோகத்தர்) – முல்லைத்தீவு மாவட்டத்தின் நிதி உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டிருப்பது முல்லைத்தீவு மாவட்டத்திற்காக புதிதாக நிதி உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டவர் தனது வேலையை பொறுப்பேற்காத காரணத்தினாலாகும். முல்லைத்தீவு போன்ற கஷ்டப்பிரதேசத்தில் கடமையாற்றுவதற்கு உத்தியோகத்தர்கள் முன்வராமை இந்த பதில் கடமை நியமனம் வழங்குவதற்கு காரணமாகும்.

திரு.ர்.ஆ.டு.யு சமரநாயக்க அவர்கள் - இந்தப் பதவியில் வெற்றிடத்தை நிரப்புவதற்காக முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்டிருப்பது உள்ளக வெற்றிடங்கள் நிரப்பும் அடிப்படையிலாகும். இந்தப் பதவியின் அடிப்படை குறைந்த தகைமையான மோட்டார் கைத்தொழிற்துறையில் ஏஞ 05 தேசிய தகைமை பெற்றிருத்தலாகும். ஆனால் தற்பொழுது மேற்படி தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் உள்வாரியாக இல்லாத காரணத்தினால் இந்த வெற்றிடத்தை நிரப்ப முடியாதுப்போனது. 2018 ஆம் ஆண்டு மீண்டும் உள்வாரியாக விண்ணப்பங்கள் கோர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
திரு.ர்.ரு. காரியவசம் அவர்கள் (பணிப்பாளர் (நிதி)) - 2018 ஆம் ஆண்டு இந்தப் பதவியில் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.4 (ஊ) மொபிடெல் நிறுவலனத்தின் கையடக்கத் தொலைபேசி கட்டணம் (“பில்”) கிடைப்பது ஏதேனும் ஒரு மாதத்தின் 25 ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 24 ஆம் திகதி வரையிலாகும். உத்தியோகத்தர்களின் தொலைபேசிக் கட்டணங்கள் “பில்“அறிவட்டுக்கொள்ள முடிவது (“பில்”) கிடைத்த மாதத்திற்கு அடுத்து வரும் மாத சம்பளத்தினாலாகும். ஆகையினால் ஒவ்வொரு மாதத்தின் (“பில்”) அடுத்த மாத சம்பளத்தில் முறையாக அறவிடப்படும்.

2.5 இணக்கம் தெரிவிக்கின்றேன்.
இந்த நிதியத்திற்காக பொது திறைசேரியின் அனுமதி கோரப்பட்டுள்ள போதிலும் இது வரையில் பொது திறைசேரியில் இருந்து அனுமதி கிடைக்கப்படவில்லை. திறைசேரியில் இது சம்பந்தமாக வினவிய போது அவர்கள் மீண்டும் உரிய கடித ஆவணங்களை விபரமாக சமர்ப்பிக்கும்படி அறிவித்துள்ளதுடன் மீண்டுமொரு முறை எழுத்துமூலம் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி உரிய அனுமதி முன்வருங்காலத்தில் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றேன்.

3.1 இணக்கம் தெரிவிக்கின்றேன்.

3.2 பாடநெறிக் கட்டணம் அறவிடுதல் தற்சமயம் நடைபெறாத காரணத்தினால் முன்னால் உரித்தாகாது.

4.1 (அ) தொழில் சந்தையில் கேள்வி மற்றும் வழங்கல் பற்றிய ஆராய்ச்சி ஒன்று 2016 ஆம் ஆண்டு 11 மாவட்டங்களிலும் 2017 ஆம் ஆண்டு எஞ்சிய 14 மாவட்டங்களிலும் நடாத்தி முடிக்கப்பட்டுள்ளது.
அதுபோன்று கீழ்க் காணும் சர்வதேச நிறுவனங்களுடனும் எமது நிறுவனம் தொழில் பயிற்சி அபிவிருத்திற்காக உறவுகளை பேணிக்கொண்டு சர்வதேசத்திற்கு பொருந்தும் வகையில் பாடநெறிகளை முன்னேற்றி பராமரிக்கின்றது.
GIZ ,WUSC ,JAICA, KOIKA, ILO, MICROSOFT, HMTI (HINDUSTAN MOTER TECHNOLOGY INSTITUTE)

4.1 (ஆ) (ை) தற்சமயம் இந்த பாடநெறிகள் பரமரிக்கப்படுகின்றதுடன் அதற்கு மேலதிமாக பயிலுனர்களை குறைவாக கவரும் கட்டுமாணத்துறையில் பயிலுனர்களுக்கு அந்தத் துறையில் பயிற்சிகளை வழங்கும் பொருட்டு மேல் மாகாணத்தை முதலில் இலக்காகக் கொண்டு 120 நாட்கள் பயற்சி வழிகாட்டி செயற்றிட்டம் ஒன்று ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

4.1 (ஆ) (ii) தற்சமயம் மேல் மாகாணத்தில் கட்டுமாணத்துறையில் 120 நாட்கள் பயற்சி வழிகாட்டி செயற்றிட்டம் ஊடாக கீழ்க் காணும் மாவட்டங்களில் பயிலுனர்கள் பயிற்சி பெறுகின்றனர்.

01.	களுத்துறை மாவட்டம்
(ை)	இங்கிரிய- (கொத்தன்)
(ை)	புளத்சிங்கள –(கொத்தன்)
02.	கொழும்பு மாவட்டம்
(ை)	ஹோமகம- (மர வேலை)
03.	கம்பஹா மாவட்டம்
(ை)	சமனபெத்த- (மர வேலை)
(ை)	நெதும்கொல்ல - (கொத்தன்)
(ை)	நெதும்கொல்ல - (நீர்க்குழாய்)

மேல் மாகாண வழிகாட்டல் செயற்றிட்டத்தில் பயிலுனர் பயிற்சிகள் முடிவடைந்த பின்னர் ஏனைய மாவட்டங்களுக்காகவும் இந்த கட்டுமாணத்துறை பயிற்சி விசேட நிகழ்ச்சித்திட்டத்தை விரிவுபடுத்த உத்தேசிக்கப்படுகிறது.

4.1 (ஆ) (iii) விடை இலக்கம் (ii) அமையவாகும்.

4.1 (ஆ) (iv) 2016 ஆம் ஆண்டினுள் தொழிலில் அமர்த்தல் 6052 ஆனதுடன் 2017 ஆம் ஆண்டினுள் தொழிற்கள் 6661 வரை அதிகரித்துள்ளது.

4.1 (ஆ) (v) வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் ஒன்றிணைந்து நிகழ்ச்சி ஒன்றை நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் அதிகளவில் தொழில் அதிகமாக காணப்படுவது மத்திய கிழக்கு நாடுகளில் என்பதனால் அந்த நாடுகள் மூலம் செலுத்தப்படுகின்ற சம்பளங்கள் போதாத காரணத்தினால் பயிலுநர்கள் அதற்காக செல்வதற்கு ஆர்வம் காட்டுவதில்லை. எவ்வாறாயினும் முன்வரும் காலத்தில் அந்த நடவடிக்கைகளை எடுத்து வெளிநாட்டு தொழில்களை வளர்ச்சியடையச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

4.1 (ஆ) (vi) 2016 2017 ஆம் ஆண்டுகளில் தொழிலில் அமர்த்தப்பட்வர்களின் அனைத்து விபரங்களும் தொழிலில் அமர்த்தும் பிரிவில் உள்ளது. இதற்கு மேலதிகமாக அந்த தகவல்கள் முகாமைத்துவத் முறைமைக்கும் (MIS) அந்த தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.
2017 2018 ஆம் ஆண்டு தொடக்கம் ஒழுங்கான முறையில் நடைபெற்ற வண்ணமுள்ளது.

4.2 இது வரை தகவல்கள் கிடைக்கப்படவில்லை.

4.3 (அ) அதிகார சபையில் காணப்படும் கடும் வாகனக் குறைப்பாடு காரணமாக கடமையின் தேவைகளின் அடிப்படையில் சந்தர்ப்பத்திற்கேற்ற வகையில் பயிற்சி உபகரனங்களுக்காக ஈடுபடுத்தப்பட்ட வாகனங்கள் 19 (மோட்டார் சைக்கில் மற்றும் முச்சக்கர வண்டி) பயிற்சி நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாதவாறு குறித்த மாவட்டங்களின் பயிற்சி விடயங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே அந்த பெறப்பட்ட வாகனங்களுக்காக அதிகார சபையின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் 22 பயிற்சி நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்பட்டுள்ளது. பயிற்சி விடயங்களுக்காக வழங்கட்ட வாகனங்கள் 22 இன் பதிவை இரத்து செய்வதற்காக மோட்டார் வாகன ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவ்வாறே மேலே குறிப்பிடப்பட்ட பயிற்சி விடயங்களுக்காக வழங்கப்பட்ட வதகனங்கள் 19 இன் நிலையான சொத்து பதிவேட்டில் வாகனத் தலைப்பிற்கு மாற்றப்பட்டுள்ளது.

4.3 (ஆ) (iv) தமிழ் மொழி மூலம் ஊடீவு புத்தகங்கள் வழங்கும் தாமதம் காரணமாக இந்த நிலைமை எற்பட்டுள்ளதுடன் தற்பொழுது தமிழ் மொழி மூலம் ஊடீவு புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளது.

4.3 (ஆ) (v) அக்போபுர தகவல் தொழிநுட்ப பாடநெறியில் 2018 ஆம் ஆண்டு முதலாவது கற்கை ஆண்டில் பயிற்சி பெறும் பயிலுநர்களின் எண்ணிக்கை 21 ஆகும்.
அக்போபுர நிலையத்தில் மர வேலை (தளபாடங்கள்) பாடநெறியில் 2018 ஆம் ஆண்டு முதலாவது கற்கை ஆண்டில் பயிற்சி பெறும் பயிலுநர்களின் எண்ணிக்கை 10 ஆகும்.

4.3 (இ) இந்த சிக்கலை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பத்திரிக்கை விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டு போட்டிகரமாக விலைகளின் கீழ் விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளதுடன் தற்பொழுது விலைமனுக்கள் மதிப்பிடப்பட்டு தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவின் (TEC) சிபாரிசுகளுடன் ஒப்பந்தக்காரர்களை தெரிவுசெய்யும் தீர்மானத்திற்காக கொள்வனவுச் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. கொள்வனவுச் சபைக்கு அனுப்பப்பட்டுள்ள போதிலும் தற்போது உணவகத்தை நடாத்திச் செல்லுகின்ற உரிமையாளரினால் அவருக்கு அநீதி ஒன்று ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டு உப தலைவர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்திற்கு தலைவரினால் அடுத்தக்கட்ட நடவடிக்கை எடுப்பதற்காக சாட்டப்பட்டுள்ளதுடன் அதன்படி மீண்டும் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவிடம் சமர்ப்பிக்க தலைவரிடம் அனுமதி கொரீ கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. .

4.4 தீர்க்கப்பட்ட வண்ணமள்ளது.

4.5 (அ) ஒட்டுமொத்தமாக கனரக வாகன சாரதி பயிற்சி ஆலோசகர் நியமிக்கப்படுவதற்காக கனரக வாகன சாரதி பயிற்சி அனுமதிப்பத்திரம் இருக்கும் ஆலோகசர்களின் தேவை ஒன்று உள்ளது. ஆனால் அந்த தகைமைகள் கொண்ட ஆலோகசர்களின் தட்டுப்பாடு காரணமாக அந்தப் பாடநெறிகளை ஆரம்பிப்பதில் கடும் அசௌகரியம் தோன்றுகின்றது. எதிர்காலத்தில் இந்த பஸ் வண்டி இரண்டையும் பயனுள்ளதாக ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்ட வண்ணமுள்ளது.

4.5 (ஆ) மோட்டார் வாகன சட்டத்தின் திருத்தத்திற்கு முன்னர் நேரடியாக கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம் விண்ணப்பிக்க முடியுமான காலத்தில் இந்த பஸ் வண்டி பயிலுநர் சாரதி பயிற்சி விடயங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அந்த சட்ட திருத்தத்தின் பின்னர் கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு முதலாவது தடவையாக விண்ணப்பம் சமர்ப்பிக்க முடியாதுப்போன காரணத்தினால் கனரக வாகன சாரதி பயிற்சி பயிலுநர்கள் பயிற்சிற்காக பதிவுசெய்யவில்லை என்பதுடன் கனரக வாகன சாரதி பயிற்சி ஆலோசகர்களையும் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்ய கடினமானது.
அந்த நிலைமையின் அடிப்படையில் குறித்த பஸ் வண்டிகளை சிறந்த தொழிநுட்ப மற்றும் போக்குவரத்து செய்யக்கூடிய நிலையில் பராமரித்து வைத்துக்கொள்வதற்கு பயிற்சி நிலையத்தில் இருந்து அண்மித்த நகரம் வரை இ.போ.அ.ச. பஸ் கட்டணம் மாத்திரம் அறவிட்டு பயிலுநர்களுக்காக போக்குவரத்து வசதிகளை வழங்க அப்போதைய முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

4.5 (இ) சேருவிலை நிலையம்- விவசாய இயந்திர பாடநெறி
நீர்க்குழாய் தொழிநுட்பவலர் பாடநெறி

துறைகளுக்காக தகைமைகள் உடைய தமிழ் மொழி மூல மற்றும் சிங்கள மொழி மூல ஆலொசகர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக அச்சு ஊடகம் ஊடாக பகிரங்கப்படுத்தப்பட்டாலும் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் இந்த நிலைமை தோன்றியுள்ளது. ஆலோசகர்கள் உள்ளீர்க்கப்பட்ட பின்னர் பாடநெறி பயிற்சி நடவடிக்கைகள் ஆரம்பிக்க இயலுமை உள்ளது.

4.5 (ஈ) தற்சமயம் குச்சவெளி மற்றும் காரைநகர் ஆகிய தொழில் பயிற்சி நிலையங்கள் 02 இல் நிர்மாணம் மற்றும் நவீனமயப்படுத்தும் விடயங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் தற்சமயம் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட வண்ணமுள்ளது.

4.5 (உ) (i) அஹுங்கம ஹோட்டல் பாடசாலை நவீனமயப்படுத்தும் செயற்றிட்டம் தற்சமயம் பூர்த்திசெயய்ப்பட்டுள்ளது. இங்கு சமையலறை விடயங்களுக்குரிய செயற்றிட்டம் தற்சமயம் இறுதிக் கட்டத்திலுள்ளது.

4.5 (உ) (ii) தற்சமயம் இந்த செயற்றிட்டத்திற்காக தனியார் பிரிவினரை தொடர்புபடுத்திக் கொள்ள பத்திரிக்கை அறிவித்தல் வழங்கப்பட்ட போதிலும் அதற்கு போட்டிகரமான விலைமனு சமர்ப்பிக்கப்படாமை காரணமாக தற்சமயம் அந்த செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

4.5 (உ) (iii) 2018 ஆம் ஆண்டில் இந்த செயற்றிட்டம் பூர்த்தி செய்யப்பட்டு பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

4.6 (அ) எதிரிகாலத்தில் தேவையான வங்கிக் கணக்குகள் 04 தவிர்ந்த ஏனைய வங்கிக் கணக்குகளை மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

4.6 (ஆ) பாடநெறிகளை தர அங்கீகாரப்படுத்துவதற்கு தேவையான உபகரணங்களை விலைக்கு வாங்குவதற்கு இந்த நிதியம் கிடைக்கப்பட்டுள்ளதுடன் தற்சமயம் பாடநெறிகளுள் அதிகமானவை தர அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி இந்த நிதியம் திறைசேரி ஒதுக்கீட்டு நிதியத்திற்கு மாற்றியமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

4.7 பயிற்சி உபகரனங்களை விலைக்கு வாங்கும்போது விலைமனுக் கோரலில் குறிப்பிடப்படும் அடிப்படை தகைமைகள் பூர்திசெய்யப்படாமை, உத்தரவாதக் காலம், காலாவதி காலம், பயன்படுத்தி பெற்ற அனுபவம், போன்ற விடயங்களை கருத்தில் கொள்ளப்படும் பொழுது குறைந்த விலையை சமர்ப்பித்துள்ள நிறுவனங்ளுள் பொருட்கள் கொள்வனவு செய்யப்படும்போது தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவினால் பயிற்சிற்கு பயன்படுத்த பொருத்தமான நீண்ட காலம் பயன்படுத்தக் கூடிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு சிபாரிசு செய்யப்படுகின்றது. ஆகையினால் சில சந்தர்ப்பங்களில் குறைந்த விலையுடைய பொருட்கள் கொள்வனவு செய்யப்படுவதில்லை என்பதுடன் மிகவும் பொருத்தமான நீண்ட காலம் பயன்படுத்தக் கூடிய பயிற்சி உபகரனங்களை கொள்வனவு செய்வதற்கு சிபாரிசு செய்யப்படுகின்றது.

4.8 தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ள இந்த தொகுதி வாகனங்கள் வழங்கப்படுதல் தொடர்பாக அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

4.9 (அ) தற்சமயம் முன்வரும் வேலைகள் செய்யப்பட்ட வண்ணமுள்ளன.

4.9 (ஆ) பிரிவுசார்நத திறன் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் உரிய கட்டிடங்கள் நிர்மாணித்தல் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் குறித்த பாடநெறிகள் ஆரம்பிக்கப்படும் போது இந்த ஆலோசகர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளனர்.

4.9 (இ) இந்த அதிகார சபையின் ஆட்சேர்ப்புத் திட்டம் 2014.03.18 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அந்த ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம் ஆலோசகர் பதவி முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்பம் (MA1-2) சேவை வகுதியின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் ஆட்சேர்ப்பு செய்யும் தகைமை தேசிய தொழில் தகைமைகள் 05 ஆம் மட்டம் வழங்கப்பட்டுள்ளது. ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட திகதிக்கு முன்னர் அப்போது இருந்த தகைமையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஆலோசகர் பதவியில் இருந்த உத்தியோகத்தர்கள் அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் அமையும் வகையில் முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்பம் அல்லாத (MA1-2) சேவை வகுதியில் நிரந்தர ஆளணியின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். ஆகையினால் அதன் கீழ் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஆலோசகர்கள் அப்போது ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட தகைமைகளின் அடிப்படையில் 03 வருட சேவைக் காலம் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

4.9 (ஈ) இந்த நாட்டினுள் முதல் தடவையாக தேசிய தொழில் தகைமைகள் சட்டகம் (NVQ) 2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்த முறையின் கீழ் தேசிய தொழில் தகைமைகள் 05 மட்டம் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் வரையறுக்கப்பட்ட பாடநெறறிகள் சிலவற்றுக்காக செயற்படுத்தப்பட்டுள்ளது. அதன் பின்னரான வருடங்களில் தொழில் பயிற்சி அதிகார சபையின் ஆலோசகர் பதவி வெற்றிடங்கள் நிரப்புவதற்காக பத்திரிக்கை விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டு ஆட்சேர்ப்பு விடயங்கள் செய்ய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. ஆனால் தொழில் சந்தைக்கள் தேசிய தொழில் தகைமைகள் 05 ஆம் மட்டம் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் போதுமானளவு முன்வராமை காரணமாக அந்த ஆலோசகர் பதவி வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்ய முடியவில்லை. ஆகையினால் பாடநெறிகள் நடாத்திச் செல்லும் சேவையின் தேவை அடிப்படையில் தேசிய தொழில் தகைமைகள் 04 ஆம் மட்டம் அல்லது அதற்கு சமமான தகைமைகள் கொண்ட ஒரு வருட சேவைக்காலமுடைய விண்ணப்பதாரிகளுள் ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

4.9 (உ) பணிப்பாளர் (மனிதவளங்கள் மற்றும் நிருவாகம்) பதவிக்காக 2015.02.22 ஆம் திகதி தொடக்கம் வெற்றிடம் காணப்பட்டுள்ளதுடன் அதற்கு அந்தச் சந்தர்ப்பமாகும் போது பிரதிப் பணிப்பாளர் ஒருவராக 10 வருடங்கள் சேவை அனுபவமுடைய உள்வாரியாக அந்தப் பதவிக்கு தகைமை பெற்றிருந்த திரு.டபிள்யு.ஏ.ரணவீர அவர்கள் பதில் கடமை புரிவதற்காக நியமிக்கப்பட்டது. அதன் பின்னர் அவரின் வினைத்திறன் மற்றும் முன்னர் அதிகார சபைக்குள் வகித்த கீழ்க் காணும் பதவிகளை கருத்தில் கொண்டு பணிப்பாளர் சபையினால் திரு.டபிள்யு.ஏ.ரணவீர அவர்களை பணிப்பாளர் (மனிதவளங்கள் மற்றும் நிருவாகம்) பதவியில் நிரந்தர மாக்கப்பட்டது.
திரு.டபிள்யு.ஏ.ரணவீர அவர்கள் முன்னர் வகித்த பதவிகள்

பதவி	சேவைக்காலம்
பணிப்பாளர் (தொழில் வழிகாட்டல் மற்றும் தொழில் உருவாக்கல்) பதில்	2006.10.02 - 2008.02.25.
பணிப்பாளர் நாயகம் (ப.கா)	2008.02.25 - 2008.04.15.
பணிப்பாளர் நாயகம் (பதில்)	2008.04.15 - 2010.12.10.
பணிப்பாளர் (தொழில் வழிகாட்டல் மற்றும் தொழில் உருவாக்கல்) பதில்	2012.11.05 - 2014.06.17.
பணிப்பாளர் (மனிதவள மற்றும் நிருவாகம்)	2015.04.24 திகதி தொடக்கம் இது வரை

இந்த நியமனம் தொழில் பயிற்சி அதிகார சபைச் சட்டத்தில் 16.(1) ஆம் பிரிவின் கீழ் பணிப்பாளர் சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள தத்துவத்தின் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளது.

4.9 (ஊ) இந்த உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருப்பது 2011 ஆம் ஆண்டு ஜுன் 09 ஆம் திகதி ஊடக ஆலோசகராவாகும். அவருக்கு வழங்கப்பட்டிருந்த கடமையாவது கற்பிக்கும் விடயங்கள் அல்ல ஊடக விடயங்களை இருங்கிணைப்புச் செய்து தொழில் பயிற்சி அதிகார சபை பற்றி ஊடகங்கள் மூலம் விளம்பரமப்படுத்திக் கொள்வதாகும். அந்த கடமைகளை அந்த உத்தியோகத்தர் சிறப்பாக நிறைவேற்றியுள்ளார். தொழில் பயிற்சி அதிகார சபையில் ஆலோசகர்களுக்கு தமது விடயதுறையை மாற்றிக்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன் அதன் பிரகாரம் அந்த ஆலோசகரும் ஊடக துறையில் இருந்து கணிணி துறைக்கு விடயத்துறையை மாற்றிக்கொண்டுள்ளார். அதற்காக இந்த ஆலோசகர் NVQ 03 சான்றிதழ் ஒன்று RPL இன் கீழ் பெற்றுக்கொண்டுள்ளார். துறையை மாற்றிக்கொண்ட பின்னர் இந்த ஆலோசகர் நாராஹேன்பிட்டி தேசிய தொழில் பயிற்சி நிலையத்தில் IT அல்லாத பாடநெறிகளுக்காக IT பாடம் கற்பிக்கும் விடயங்களை செய்துள்ளார்.

4.9 (ஊ) அங்கீகரிக்கப்பட்ட ஆளணியை தான்டிச் செல்லப்படவில்லை. இந்த அதிகார சபைக்காக முகாமைத்துவச் சேவைத் திணைக்களம் மூலம் ஆளணி அங்கீகரிக்கப்படும் போது முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்பம் அல்லாத (MA 1-2) சேவை வகுதியின் ஆலோசகர் பதவிகள் 1177 பதவி வகிப்பவருக்கு தனிப்பட்ட முறையில் அமையும் விதத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அந்த பதவிகள் வரையறைக்குள் ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த ஆலோசகர்கள் அப்போது அந்த உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட தகைமையான 03 வருட கால சேவை அனுபவம் பூர்த்தி செய்யப்பட்ட நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆகையினால் அங்கு அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு அப்பால் ஏதுவும் நடைபெறவில்லை.

4.10 (அ) இந்த ஒப்பந்த நிறுவனத்திற்காக மேற்படி விடயத்திற்காக கொடுப்பனவு செலுத்துவது இடைநிறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான ஆரம்ப கட்ட விசாரணை நடாத்தப்பட்டு அதன் சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

4.10 (ஆ) (i) இந்த செயற்றிட்டத்தின் நிர்மாணிப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் தற்பொழுது பயிற்சி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

4.10 (ஆ) (ii) இந்த செயற்றிட்டம் மூலம் சுற்றுலா கைத்தொழில் மேம்பாட்டிற்காக குறிப்பிடத்தக்க பங்களிப்பு கிடைக்ககப்படுவதால் இதற்கு சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் அடிப்படை இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் இந்த காணித்துண்டை கையளிப்பதுடன் தொடர்பான அமைச்சரவைப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

4.10 (ஆ) (iii) தற்சமயம் இந்த செயற்றிட்டம் சிறப்பாக செயற்படுவதுடன் வெள்ளப்பெருக்கு நிலைமைகள் அறியப்படவில்லை.

4.10 (ஆ) (v) இது வரை வெள்ளப்பெருக்கு நிலைமை அல்லது நீர்யினால் மூழ்கடிக்கப்படுதல் இந்த நிலத்தில் நடந்துள்ளதாக அறியப்பட வில்லை.

4.10 (இ) (i) CIDA நிறுவனம் மூலம் ஆலோசனை வழங்கப்படுதல் தாமதப்பட்ட காரணத்தினால் 2016.04.08 ஆம் திகதிய விலைமனுவை 2016.10.27 ஆம் திகதி நடைபெற்ற கொள்வனவு தொடர்பான தீர்மானக்குழுவுக்கமைய இரத்து செய்யப்பட்டது.

4.10(இ)(ii) தற்சமயம் இதற்கு கொள்வனவுச் சபையின் இறுதியான தீர்மானம் வழங்கப்படவுள்ளது.

4.10 (இ) (iii) இந்த செயற்றிட்டம் 2018 ஆம் ஆண்டு ஆரம்ப கட்டமாக நவீனமயப்படுத்தும் பணிகள் நிறைவுசெய்யப்பட்டு பய்னபடுத்தக்கூடிய வகையில் கொண்டுவருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

5.1 முழுமையான வருடாந்த அறிக்கை தயாரிக்கும் பணிகள் நிருவாகப் பிரிவின் மூலம் நிறைவேற்றப்பட்ட வண்ணமுள்ளது. அதன் நிருவாகப் பகுதி அரச கணக்காய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

5.2 நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் மூலம் வெளியிடப்பட்ட அரச நிதி சுற்றறிக்கை இல. 01/2014 இற்கு அமைய வருடாந்த செயற்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ள-ப்பட்டுள்ளது.

5.3 (அ) செயற்நடவடிக்கை திட்ட வேலைகளின் முன்னேற்றத்தின் மாற்றங்கள் அந்தந்த பிரிவுகளிடம் இருந்து பெறப்பட வேண்டியுள்ளது.

5.3 (ஆ) செயற்நடவடிக்கை திட்ட வேலைகளின் முன்னேற்றத்தின் மாற்றங்கள் அந்தந்த பிரிவுகளிடம் இருந்து பெறப்பட வேண்டியுள்ளது.

5.4 எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் நிறைவேற்றப்படும் வகையில் 2018 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட கணக்காய்வு விடயங்கள் இற்றைப்படுத்தலுடன் செய்யப்பட்ட வண்ணமுள்ளன.

5.5 (அ) கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்படும் விபத்து சம்பந்தமாக 2015 ஆம் ஆண்டு நியமி-க்கப்பட்ட மூவரடங்கிய குழு மூலம் புலனாக்கப்பட்டிருப்பது இந்த வாகன விபத்து நடைபெற்று இற்றைக்கு வருடங்கள் 12½ கடந்துள்ள நிலையிலும் முந்திய விசாரணை அறிக்கைகள் சட்ட கோட்பாடுகளுக்கு முரனா-கவோ ஒழுங்காக விசாரணை செய்யப்படாமை காரணமாக நிறுவனத்திற்கு மீளளிப்பு செய்துகொள்ள முடியா-துப் போகியுள்ளது.

அவ்வாறே இந்த சம்பவத்திற்கு பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர் ஒருவர் விசாரணைச் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பதும் விசாரணைக்குழு உத்தியோகத்தர்கள் மற்றும் நட்டங்களை அறிவிட்டுக்கொள்ள வேண்டிய உத்தியோகத்தர்கள் 08 பேர்களுள் 06 பேர்கள் தற்சமயம் அதிகார சபை சேவையில் இருந்து நீங்கிச் சென்றுள்ளார்கள் எனவும், குழுவினால் புலனாக்கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட இந்த புதிய குழுவின் சிபாரிசுக்கமைய அரச கணக்காய்வுப் பிரிவினால் இது சம்பந்தமாக செய்யப்பட்டுள்ள புலனாக்கப்பட்டவைகளையும் அடிப்படையாகக் கொண்டு தாமதமின்றி இந்த விடயத்தை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து பொருத்தமான நடவடிக்கைகளை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

5.5 (ஆ) இந்த உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருப்பது அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் பணிப்பின் பிரகாரம் ஜனாதிபதியின் செயலாளரினாலாகும்.

அவருக்கு ஒரு வாரத்திற்கு 03 அரைநாட்கள் விடுவிக்கப்பட்டிருப்பது தலைவர் அவர்களின் அனுமதியின் மூலமாகும். தொழில் பயிற்சி அதிகார சபையின் சட்டத்திற்கமைய தலைவர் அவர்கள் பிரதம நிறைவேற்று அதிகாரியாவதனால் இந்த விடுவிப்பு செய்யப்பட்டுள்ளதுடன் அவர் மத்திய கலாசார நிதியத்தின் நிருவாகக் குழு மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள கொடுப்பனவு ஒன்றை பெற்றுள்ளார்.

இது சம்பந்தமாக மத்திய கலாசார நிதியம் அழைத்துள்ள பொது வியாபாரங்கள் பற்றிய செயற்குழுக் கூட்டத்தில் கலாசார அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிடப்பட்டிருப்பது இந்த உத்தியோகத்தருக்கு செலு-த்தப்படும் கொடுப்பனவை திறைசேரியில் அங்கீகரித்துக்கொள்ளும் படியாகும். அதுபோன்று இந்த உத்-தியோகத்தர் மத்திய கலாசார நிதியத்தில் சேவையாற்றுகின்றார் என்பது தெரிவிக்கப்பட்டிருப்பது முழுநேர அடிப்படையில் இல்லை ஒரு வாரத்திற்கு 03 அரைநாட்கள் மட்டுமே.
மேற்படி விடயம் தொடர்பாக ஜனாதிபதி செயலாளரிடம் வினவி ஆலோசனை பெறுவதற்கு கடிதம் அனுப்ப-ப்பட்டுள்ளதுடன் இதுவரை அதற்கு பதில் கிடைக்கப்படவில்லை.

5.5 (இ) பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர் (திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி), பணிப்பாளர் (தொழிற்சார் வழிகாட்டல், தொழில் ஸ்தாபித்தல் மற்றும் மேம்படுத்தல்) பணிப்பாளர் (பயிற்சியளித்தல்) பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்தல் சம்பந்தமாக செய்யப்பட்ட உள்ளக விசாரணை அறிக்கை மற்றும் சுயாதீனமான விசாரணை உத்தியோகத்தர் ஒருவரின் சேவையை பெறுவதற்காக 2018.07.28 ஆம் திகதி பத்-திர இலக்கம் 180/2 என பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
ஆனால் அந்த பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பணிப்பாளர் சபை நடப்பு எண் (கோரம்) இல்லாத காரண-த்தினால் மீண்டும் ஒருமுறை பணிப்பாளர் சபைக் கூட்ட இலக்கம் 181 இற்காக கூட்ட இலக்கம் 180 இற்கு சமர்ப்பிக்கப்பட்ட பத்திரங்கள் அனைத்தும் கலந்துரையாடப்பட்டது. கூட்ட இலக்கம் 181 இலிலும் பணி-ப்பாளர் சபை நடப்பு எண் இல்லாத காரணத்தினால் இது பணிப்பாளர் சபைக்குள் கலந்துரையாடும் அளவு-க்கு முக்கியத்துவம் இல்லை என கருதாத காரணத்தாலும் வேறு தொழிநுட்ப விடயங்களின் அடி-ப்படையிலும் அந்தப் பத்திரம் பிற்போடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் பணிப்பாளர் சபை இல்கம் 184 இற்கு பணிப்பாளர் சபைக் கூட்ட இலக்கம் 180 மற்றும் 181 இற்காக சமர்ப்பிக்கப்பட்ட பத்திரங்கள் தொடர்பாக இலக்கம் 184.்.9 என புதிய பணிப்பாளர் சபை சமர்ப்பித்த பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அங்கு எடுக்கப்பட்ட தீர்மானம் ஆவது இலக்கம் 180 மற்றும் இலக்கம் 180 கொண்ட பணிப்பாளர் சபை தீர்மானங்கள் தொடர்பாக இணக்கப்பாட்டிற்கு வர முடியாது என்ப-தனால் அது தொடர்பாக ஏதேனும் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டிருப்பின் அந்தத் தீர்மானங்களுக்காக எந்த பொறுப்புக்கூறலுக்கும் பணிப்பாளர் சபை உடன்படாது என்பதாகும். அதன் பிரகாரம் பத்திர இலக்கம் 180/2 மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள குழு அறிக்கை மற்றும் சுயாதீன விசாரணை உத்தியோகத்தரினால் 2015.08.03 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு நடாத்திச் செல்வதற்கும் தீர்மானிக்கப்பட்ட விசாரணை ஒன்று சம்பந்தமாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைக்கப்படவில்லை. அதன் பிரகாரம் பணிப்பாளர் சபை இந்த நியமனம் சம்பந்தமாக சமர்ப்பித்துள்ள விசாரணை அறிக்கை நிராகரிக்கப்பட்ட ஊடாக எடுக்கப்பட்ட தீர்மானமாவது அது சட்டப்பூர்வமாகவும் நியாய தர்மங்களுடனும் செய்யப்பட்டுள்ளது என்பதாகும்.

(எ) பிரதிப் பணிப்பாளர் பதவிகள்
எமது நிறுவனத்தினால் தகைமைகள் இல்லாத பிரதிப் பணிப்பாளர்கள் இருவர்கள் நியமிக்கப்படவில்லை. அனைத்து பிரதிப் பணிப்பாளர்களும் நியமிக்கப்பட்டிருப்பது ஆஆ-1-1 சேவை வகுதியில் 10 வருடங்கள் சேவை அனுபவம் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் மற்றும் வினைத்திறமைக்காண் தடைதாண்டல் சித்திபெற்ற பின்னராகும்.

(எ) உதவிப் பணிப்பாளர் பதவிகள்

கணக்காய்வின் மூலம் வாய்மொழிமூலம் தெரிவிக்கப்பட்டதன் பிரகாரம் உதவிப் பணிப்பாளர்களுள் ஒருவரான திருமதி.இனோகா குணவர்தன எனும் உத்தியோகத்தர் முன்னர் இருந்த முகாமைத்துவத்தின் தீர்மானம் ஒன்றின்படி உதவிப் பணிப்பாளர் (இணைப்பாளர்) பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். தற்சமயம் அந்த உத்தியோகத்தர் பயிற்சியளித்தல் பிரிவில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார் என்பதுடன் பதவிப்பெயரும் மாற்றியமைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட வண்ணமுள்ளது. கணக்காய்வு மூலம் வாய்மொழிமூலம் தெரிவிக்கப்பட்டதன் பிரகாரம் மற்றுமொறு உதவிப் பணிப்பாளரான திருமதி. எச்.எதிரிசிங்க அவர்கள் உதவிப் பணிப்பாளர் (நிதி) என ஆட்சேர்ப்பின் போது அதற்கு தேவையான தகைமைகள் பூர்த்திசெய்துகொண்டுள்ளார்.

(vi) சட்ட உத்தியோகத்தர் பதவி

இந்த சட்ட உத்தியோகத்தர் பதவி வகிக்கும் உத்தியோகத்தர் 2013.09.16 ஆம் திகதி அதிகார சபையில் சேவைக்கு சமூகமளித்துள்ளார். 2011.12.13 ஆம் திகதி உச்சநீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டுள்ளார் எனவும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டமானி (கௌரவ) பட்டம்பெற்றுள்ளர். உச்சநீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட பின்னர் 2011.12.13 ஆம் திகதி தொடக்கம் 2012.05.21 ஆம் திகதி வரை, சிரேஷ்ட சட்டத்திரணியாக சேவை ஆற்றியுள்ளார் என்பதுடன் 2012.02.22 ஆம் திகதி தொடக்கம் 2013.09.03 ஆம் திகதி வரை தனியார் நிதி நிறுவனம் ஒன்றில் சட்ட உத்தியோகத்தராக சேவையாற்றியுள்ளார். ஆட்சேர்ப்பு செய்யும் தகைமை ஆவது, சட்டமானி பட்டத்துடன் உச்சநீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட பின் ஒரு வருட (01) சேவை அனுபவம் பெற்றிருத்திலாகும்.

அதன் பிரகாரம் இந்த சட்ட உத்தியோகத்தர் அதிகார சபையின் சேவைக்கு சமூகமளிக்கும்வேளையில் உச்சநீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட பின்னர் 1 வருடமும் 09 மாதங்களும் பூர்த்திசெய்துள்ள காரணத்தினால் ஆட்சேர்ப்பு செய்யும் திட்டத்தில் காணப்படும் தேவைகளை பூர்த்திசெய்துகொண்டுள்ளார்.

(vii) உதவிப் பணிப்பாளர் (நிதி)

அதிகார சபையில் உதவிப் பணிப்பாளர் (நிதி) பதவிற்காக அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு வெளியே இணைத்துக்கொள்ளப்பட வில்லை. நிதிப் பிரிவிற்காக உதவிப் பணிப்பாளர் பதவிகள் 05 அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

5.5 (இ) வருமானத்திற்கு வரவு வைப்பதற்காக அங்கீகாரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட வண்ணமுள்ளது.

5.5 (ஈ) நிதி முறைகேடுகளுக்கு எதிராக வேலைநிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்ட சம்பளத்தை அறிவிடுவதற்காக னுஆசு 1029.'.2014 கொண்ட நிதி அறவிட்டுக் கொள்ளும் (Money Recovery Matter) வழக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் தற்சமயம் அது விசாரிக்கப்பட்ட வண்ணமுள்ளது.
மேலும் இது சம்பந்தமாக தற்சமயம் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினாலும் விசாரணை நடத்தப்பட்ட வண்ணமுள்ளது.

இந்த உத்தியோகத்தருக்கு சம்பளமாக ரூபா 1,711,961/= பணம் செலுத்தப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்கின்றேன். இந்த பணத்தை அறவிட்டுக்கொள்வதற்காக மாவட்ட நீதிமன்றத்தில் இந்த உத்தியோகத்தருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தற்சமயம் விசாரிக்கப்பட்ட வண்ணமுள்ளது.

5.5 (உ) முந்திய வருடத்தின் கொடுப்பனவு செலுத்தல் என்பதனால் அமைச்சின் செயலாளரிடம் இருந்து அனுமதி பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட வண்ணமுள்ளது.

5.6 நிறுவன ரீதியான தேவைகளின்படி மதிப்பீடு செய்யப்பட்ட வரவு செலவு நிதியங்களின் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு நேரிட்டுள்ளதுடன் இதற்காக முறையான நிருவாகக் குழு அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதன்படி கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்படமாட்டாது.

6 (அ) தற்சமயம் ஆட்சேர்ப்பு செய்தல் உரிய முறைகளுக்கமைய நடைபெற்றவண்ணமுள்ளது. அதன்படி நேர்முகப் பரீட்சை மற்றும் செய்முறைப் பரீட்சை முறையாக நடைமுறைப்படுத்துவதற்காகவும், வருடாந்த இடமாற்ற கொள்கைக்கமைய செயற்படுத்துவதற்காகவும், நடவடிக்கை எடுக்கப்படும்.

6 (ஆ) கணினி மூலம் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட வண்ணமுள்ளன.

6 (இ) தற்சமயம் கோடிடப்பட்ட காசோலை ஒன்று மூலம் பயிலுநர் கொடுப்பனவு செலுத்தப்படும். தற்சமயம் பாடநெறிக் கட்டணம் அறவிடப்படுவதில்லை. தனியான கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

6 (ஈ) 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.